**O.S. No. : 85/2024**

Dated: 18.06.2026

**வா.சா.1: ஜிதேந்திரா ; த/பெ. ஸ்ரீனிவாச கவுடா**

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. நான் எனது தம்பி மற்றும் தாயாரின் மீது இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்து ஆதியில் எனது தாயாருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான், மூதாதையர் வழியில் பாத்தியப்பட்டிருந்தது. எனது தாயார் பெயரில் எந்த வருடம் செட்டில்மண்ட் பத்திரம் எழுதி வைக்கப்பட்டது என்றால் 1988 ஆம் ஆண்டு எழுதி வைக்கப்பட்டது.

2. வழக்கு சொத்து போக எனது தந்தை வழி சொத்துக்கள் கர்நாடகா மாநிலத்தில் இருந்தது என்றால் சரிதான். மேற்படி எனது தந்தை வழி சொத்துக்கள் எப்போது பாகம் பிரிக்கப்பட்டு கொடுக்கப்பட்டது என்றால் வருடம் தற்போது ஞாபகம் இல்லை, எனது தந்தை 1972 ஆம் ஆண்டு இறந்தார், அதற்கு பிறகு 2 முதல் 3 வருடங்களில் பாகம் பிரித்து சொத்து கொடுக்கப்பட்டது. கர்நாடகாவில் இருந்த எனது தந்தை வழி சொத்துக்கள் பாகம் பிரிக்கப்பட்டு கொடுக்கப்பட்டபோது எனக்கு வயது சுமார் 5 இருக்கும் என்றால் சரிதான்.

3. நான் எனது வழக்குரை மற்றும் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் கர்நாடகாவில் உள்ள சொத்துக்களை நான் பேசி பாகப்பிரிவினை செய்து கொடுத்ததாக கூறுவது உண்மையல்ல என்றால் சரியல்ல, எனது தந்தை இறந்தபோது பாகப்பிரிவினை செய்து கொடுக்கப்படும்போது குறைவான சொத்துக்கள் மட்டுமே கொடுக்கப்பட்டது, நான் உரிய வயதை எட்டியபிறகு பேசி எனது தந்தைக்கு உரிய சொத்துக்களை பெற்றுக்கொடுத்தேன். மேற்படி சங்கதிகளை நான் எனது வழக்குரை மற்றும் முதல் விசாரணை

பிரமாண வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை.

4. நான் எனது வழக்குரை மற்றும் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் எனது தம்பியை பற்றி அவதூறாக கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையல்ல என்றால் சரியல்ல, உண்மைதான். எனது தம்பி உதகையில் இருக்கும்போது ஸ்ருதி என்ற பெண்ணை காதலித்து திருமணம் செய்துகொண்டார் என்றால் சரிதான். அந்த ஸ்ருதி என்ற பெண் எனது உறவினர் என்றால் சரிதான். அது தொடர்பாக அந்த பெண்ணின் தந்தை புகார் கொடுத்து பின்னிட்டு அந்த புகார் முடிக்கப்பட்டுவிட்டது என்றால் சரிதான், நான் தலையிட்டு ஊரில் பேசிதான் அந்த புகார் முடிக்கப்பட்டது.

5. மேற்படி ஸ்ருதி என்ற பெண்ணும், எனது தம்பியும் பின்னிட்டு நீதிமன்றம் மூலமாக விவாகரத்து பெற்றுவிட்டார்கள் என்றால் சரிதான். அதன் பிறகு எனது தம்பி பெங்களூருவை சேர்ந்த ஹர்சவர்தினி என்ற பெண்ணை திருமணம் செய்து தற்போது அவர்களுக்கு ஒரு பெண் குழந்தை உள்ளது என்றால் சரிதான். எனது தாயார் எனது தம்பிக்கு நகைகளை கொடுத்ததாக வழக்குரையில் கூறியுள்ள நிலையில் அவ்வாறு நகை எந்த வருடம் கொடுக்கப்பட்டது, யார் முன்னிலையில் கொடுக்கப்பட்டது என்ற விவரங்களை எனது வழக்குரை மற்றும் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரியல்ல, கூறியுள்ளேன். நான் அவ்வாறு வழக்குரை மற்றும் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் மேற்படி சங்கதிகளை கூறாமல், தற்போது வழக்கிற்காக கூறியுள்ளதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. நான் எனது மனைவிக்கு பாத்தியப்பட்ட நகைகளை எனது தாயாரிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, எனது தாயார் பெற்றுக்கொண்டார். நான் தற்போது லிங்கா வில்லா என்ற வீட்டில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். தாவா சொத்து 25.08.1988 தேதிய செட்டில்மண்ட் பத்திரப்படி எனது தாயாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். எனது தாயார் இறக்கும்வரை தாவா சொத்து பொறுத்த வருவாய் ஆவணங்களை அனைத்தும் எனது தாயார் சாந்தா பெயரில்தான் இருந்து வந்தது என்றால் சரிதான்.

7. எனது தாயார் வழக்கு சொத்தில் இருந்து வந்த வருமானத்தை வைத்துதான் என்னையும், எனது தம்பியையும் பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல, வழக்கு சொத்து மற்றும் கர்நாடகாவில் இருந்த சொத்துக்களிலிருந்து வந்த வருமானத்தை வைத்துதான் பராமரித்தார். கர்நாடகாவில் எனது தாயார் பெயரில் சொத்துக்கள் உள்ளதா என்றால் இல்லை. எனது தாயார் பெயரில் கர்நாடகா மாநிலத்தில் முன்பு சொத்து இருந்ததா என்றால் இருந்தது. அந்த சொத்துக்களை எனது தாயார் விற்பனை செய்துவிட்டாரா என்றால் இல்லை, அந்த சொத்துக்களை எனது தாயார் எனது பெயருக்கும், எனது தம்பி பெயருக்கும் பாகம் செய்து கொடுத்துவிட்டார்.

8. அதில் எனக்கும், எனது தம்பிக்கும் எவ்வளவு விஸ்தீரணம் உள்ள பூமி கொடுக்கப்பட்டது என்றால் 4½ ஏக்கர் நிலம் இருவருக்கும் பாதியாக பிரித்து கொடுக்கப்பட்டது, மேலும் அது தவிர இருந்த வணிக சொத்துக்கள் இருவருக்கும் சமமாக பிரித்துக்கொடுக்கப்பட்டது. நான் எனது கல்லூரி படிப்பினை பாதியில் நிறுத்திவிட்டு வந்து விவசாயம் பார்த்தேன் என்றால் சரியல்ல, நான் கல்லூரி படிப்பினை முழுமையாக முடித்துவிட்டு வந்துதான் விவசாயம் பார்த்தேன். நான் எனது

தாயாரின் அனுமதியுடன் தாவா சொத்தில் விவசாயம் செய்து வந்தேன் என்றால் சரிதான், எனது தாயாருக்கு வயது மூப்பின் காரணமாக விவசாயம் செய்ய இயலவில்லை என்பதால் நான் விவசாயம் செய்தேன்.

9. நான் தாவா சொத்தில் தனித்த சுவாதீனத்தில் இருக்கவில்லை என்றால் சரியல்ல, நான் கடந்த 30 வருடங்களாக தாவா சொத்தின் சுவாதீனத்தில் இருந்து வருகிறேன். நான் எனது தாயாருக்கு உதவி செய்யும் நோக்கில்தான் எனது தாயாரின் அனுமதியுடன் தாவா சொத்தில் விவசாயம் செய்து வந்தேன் என்றால் சரிதான், எனது தாயாரின் அனுமதியுடன்தான் விவசாயம் செய்து வந்தேன். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 விவசாய கடன் அட்டையில் தாவா சொத்து குறித்து எந்தவித குறிப்பும் இல்லை என்றால் சரியல்ல, ஆடாசோலை கிராமம் நில அளவை எண் 125/4B என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் மேற்படி நில அளவை எண்ணிற்கு கீழே குத்தகைக்கு எடுத்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், அது கடன் அட்டை புத்தகத்தில் வழக்கமாக வரும் வாசகமாகும்.

10. வா.சா.ஆ.1 ஆவணத்தில் குத்தகைக்கு எடுத்தது என்று கூறியுள்ள நிலையில் குத்தகைக்கான ஆவணங்கள் ஏதாவது உள்ளதா என்றால் குத்தகைக்கு ஆவணம் எதுவும் இல்லை, கடன் பெறும்போது எனது தாயார் ஒரு நோட்டரி ஆவணம் மூலம் நான்தான் விவசாயம் செய்து வருகிறேன் என்று ஆவணம் கொடுத்தால்தான் கடன் கொடுப்பார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணத்தை என்ன காரணத்திற்காக கூட்டுறவு சங்கதிலிருந்து பெற்றேன் என்றால் நான் கூட்டுறவு சங்கதிலிருந்து பெற்ற கடனை முழுவதுமாக செலுத்திவிட்டேன் என்பதற்காக வங்கியிலிருந்து

பெறப்பட்ட ஆவணமாகும்.

11. மேற்படி ஆவணம் நான் கேட்டுக்கொண்டதன் பெயரில்தான் வழங்கப்பட்டது என்றால் சரிதான், நான் கடன் முழுவதையும் கட்டிவிட்டதால் நிலுவை இல்லை என்று சான்று கேட்டதால் அந்த ஆவணம் கொடுக்கப்பட்டது.

12. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 வரிசை ஆவணங்கள் அனைத்தும் என்னால் இந்த வழக்கிற்காக தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல, அவை உண்மையான ஆவணங்களாகும். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 வரிசை ஆவணங்களில் முதல் ஆவணமான 18.06.2006 தேதியிட்ட ஆவணத்தில் கூட்டுறவு வங்கியின் செயலாளரின் முத்திரை எதுவும் வைக்கப்படவில்லை என்றால் சரிதான், அவ்வாறுதான் எனக்கு கொடுக்கப்பட்டது.

13. வா.சா.ஆ.5 ஆவணத்தில் ஆவணத்தை வழங்கியவரின் கையொப்பம் எதுவும் இல்லை என்றால் சரிதான், அது ஆழ்துளை குழாய் கிணறு அமைத்ததற்கான ரசீதாகும். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.7 வரிசை மின் கட்டண ரசீதுகளில் 14.11.2014 தேதியிட்ட ரசீது உள்ளிட்ட அனைத்து ரசீதுகளிலும் எனது பெயர் உள்ளது என்றால் சரிதான்.

14. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.8 வரிசை மின் கட்டண ரசீதுகளில் 01.04.2021, 18.05.2021, 28.10.2024 ஆகிய தேதியிட்ட ரசீதுகளில் எனது தாயார் சாந்தா பெயர்தான் உள்ளது என்றால் சரிதான், ஆரம்பத்தில் எனது பெயரில் வணிக மின் இணைப்பு பெறப்பட்டது, பின்பு மானியத்தொகையுடன் மின்

இணைப்பு பெற விண்ணப்பிக்கப்பட்டபோது யார் பெயரில் சொத்து உள்ளதோ அவர் பெயரில்தான் மின் இணைப்பு பெற முடியும் என்பதால் எனது தாயார் பெயரில் மின் இணைப்பு பெறப்பட்டது.

15. வா.சா.ஆ.9 ஆவணம் எனது தாயார் பெயரில்தான் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான், கடன் பெறுவதற்காக நில உரிமையாளர் பெயரில் அந்த ஆவணம் பெறப்பட்டது. வா.சா.ஆ.10 வரிசை ஆவணங்கள் அனைத்தும் எனது தாயார் பெயரில்தான் உள்ளது என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.11 கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சான்றில் 1.60 ஏக்கர் எனது அனுபவத்தில் இருந்து வருவதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தின் விஸ்தீரணம் 1.32 ஏக்கர்தான் என்றால் சரிதான், ஆனால் சிட்டாவில் 1.6 ஏக்கர் என்றுதான் காட்டப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.11 ஆவணம் 10.11.2000 தேதியில் வழங்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான்.

16. வா.சா.ஆ.11 ஆவணத்தில் மேற்படி ஆவணமானது விவசாய மற்றும் நகை கடன் பெற மட்டும் என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.12 ஆவணத்தில் மொத்த விஸ்தீரணம் 1.58 ஏக்கர் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.12 ஆவணத்தில் அந்த ஆவணம் ஒரு வருட காலத்திற்கு மட்டும்தான் செல்லுபடியாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

17. நான் தாக்கல் செய்துள்ள வருவாய் ஆவணங்கள் அனைத்தும் தாவா சொத்தின் எனது சுவாதீனத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் அல்ல என்றும், அவை ஆதரவு ஆவணங்கள் மட்டுமே என்றும் சொன்னால் சரியல்ல. தற்போது தாவா சொத்தினை எனது

தாயார் எனது தம்பியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து செட்டில்மண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான், அந்த ஆவணத்தை எனது தம்பி, எனது தாயாரை ஏமாற்றி பெற்றுள்ளார்.

18. தற்சமயம் தாவா சொத்தினை பொறுத்து எனது தம்பியின் பெயரில் பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது தவிர எனது தாயார் லிங்கா வில்லா என்ற சொத்தினை பொறுத்து தன்னை ஏமாற்றி அந்த சொத்தினை பெற்றுவிட்டதாக வருவாய் கோட்டாட்சியரிடம் மனு கொடுத்து விசாரணைக்கு பிறகு அந்த சொத்தினை பொறுத்த ஆவணம் ரத்து செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான். மேற்படி வருவாய் கோட்டாட்சியரின் உத்தரவிலேயே தாவா சொத்தின் சுவாதீனத்தை நான் எனது தம்பி வசம் ஒப்படைக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அந்த உத்தரவில் தாவா சொத்தின் சுவாதீனத்தை எனது தாயாரிடம் ஒப்படைக்கவேண்டும் என்றுதான் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

19. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் எனது தாயாருக்கு அல்சைமர் (ஞாபக மறதி) வியாதி இருப்பதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். அது தொடர்பான மருத்துவ ஆவணங்களை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தாயாருக்கு 1988 ஆம் வருடத்திய செட்டில்மண்ட் பத்திரம் மூலம் உரிமையான தாவா சொத்தினை 2024 ஆம் ஆண்டு எனது தம்பியான 1 ஆம் பிரதிவாதியின் பெயருக்கு எனது தாயார் தானமாக எழுதிக்கொடுத்துவிட்ட பிறகு தாவா சொத்தில் எனக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல, எனது தாயாரின் சொத்து என்பதால் எனக்கும் அதில் உரிமை உள்ளது.

20. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் பத்தி–17–ல் தாவா சொத்தை நான் ஒரு வாடகைதாரர் என்ற குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு நான் வழக்கு சொத்தினை பொறுத்து வாடகைதாரர் என்று நிரூபிக்க இந்த வழக்கில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து குறித்து உரிய அதிகாரம் கொண்ட வருவாய் கோட்டாட்சியரின் உத்தரவு உள்ளதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் உயர்நீதிமன்றத்தில் ஒரு நீதிப்பேராணை மனுவினை தாக்கல் செய்து அது தற்சமயம் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். எனது வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை.

LOGANATHAN PRAKASH

Digitally signed by LOGANATHAN PRAKASH
Date: 2026.06.18 18:09:23 +0530